UNITED NATIONS
SRI LANKA

# இலங்கை: 1.7 மில்லியன் மக்களுக்கான உயிர்காப்பு ஒத்துழைப்புக்காக 1.7 மில்லியனுக்கு அதிக அ.டொலர்களுக்கு ஐநா அழைப்பு விடுக்கிறது

**2022 ஜூன் 9, கொழும்பு:** இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அணியினர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள், இணைந்த மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் (HNP) திட்டமொன்றை இன்று வெளியிடவுள்ளன. ஜூன் முதல் செப்டெம்பர் வரையான நான்கு மாதங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் பொருளாதார வீழ்ச்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 1.7 மில்லியன் மக்களுக்கு உயிர்காப்பு ஒத்துழைப்பைப் பெற்றுத்தந்திட 47.2 மில்லியன் அ.டொலர்களைக் கோருவதே இதன் நோக்கமாகும். இது அண்மைய நெருக்கடி காரணமாக ஏற்படும் அவசரத் தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்காக ஐக்கிய நாடுகளின் துணையுடனான பல்துறை சர்வதேச ஒத்துழைப்புக்கு இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கான நேரடி பதில் நடவடிக்கையாக அமைந்துள்ளது. இதன்போது சுகாதார தேவைகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள், இலக்கு வைக்கப்பட்ட போஷாக்கு சேவைகள் - பாதுகாப்பான குடிநீர் என்பவற்றை உள்ளடக்கிய உணவு மற்றும் விவசாயம், அவசரத்தேவை வாழ்வாதாரங்கள் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பாக குறிப்பாக அவதானம் செலுத்தப்படும்.

கிட்டத்தட்ட 5.7 மில்லியன் பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்கள் உடனடி மனிதாபிமான உதவிக்கான தேவையுடன் இருப்பதாக இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மனிதநேய பங்காளர்கள் மதிப்பிட்டுள்ளனர். HNP நடவடிக்கையின் கீழ் இலக்கு வைக்கப்பட்டுள்ள 1.7 மில்லியன் மக்களினதும் வாழ்வாதாரங்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளுக்கான அணுகல் அபாயகரமான நிலையில் இருப்பதோடு உடனடி உதவி தேவையாக உள்ளது.

இலங்கைக்கான ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டி, ‘‘இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நிலைமையை பல்வேறு காரணிகள் பாதிக்கின்றன, நாம் இப்பொழுதே செயற்படாவிட்டால் அதிகளவான குடும்பங்களுக்கு தமது அடிப்படை உணவுத் தேவைகளைக்கூட நிவர்த்தி செய்ய முடியாமல் போகும்’’ என்று குறிப்பிட்டதோடு, வருட இறுதியில் மனித அவலம் ஒன்று ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அதேவேளை அபிவிருத்தி மற்றும் சமூகப் பொருளாதார இடையீடுகளுக்கு நடுவில் இணைப்பை ஏற்படுத்துவதற்குமான அவசரத் தேவை குறித்தும் அவர் அழுத்தம் கொடுத்திருந்தார்.

‘‘முன்பு உறுதியாக இருந்த இலங்கையின் சுகாதார சேவைகள் முறைமையானது இப்பொழுது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, அத்துடன் அதிக நலிவடைந்தோர் மிக மோசமான நிலைமைக்கு முகங்கொடுக்கின்றனர். சர்வதேச சமூகத்தினர் இலங்கை மக்களுடன் ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டிய தருணம் இதுவே. இந்த இடரினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், ஆண்கள், மற்றும் சிறுவர்களுக்கு உயிர் பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பெற்றத்தந்து நாட்டில் மனிதாபிமானத் தேவைகளின் சீர்குலைவைத் தடுப்பதற்காக இத் திட்டத்திற்கு உடனடி ஒத்துழைப்பைப் பெற்றுத்தருமாறு நன்கொடையாளர்கள், தனியார் துறையினர் மற்றும் தனி நபர்களுக்கு ஐநா மற்றும் மனிதாபிமானப் பங்காளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்’’ என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முன்பு உயர்-நடுத்தர வருமானமீட்டும் நாடாக இருந்த இலங்கையானது, சுதந்திரத்தின் பிந்தைய தனது மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுக்கின்றது. மே மாதம் உணவுப் பொருட்களின் விலையேற்றம் 57.4% ஆக காணப்பட்டது. அதேவேளை முக்கிய உணவுப் பொருட்களுக்கும் அத்துடன் சமையல், போக்குவரத்து மற்றும் தொழிற்துறை தேவைகளுக்கான எரிபொருளுக்கும் பரவலான தட்டுப்பாடு நிலவி வருவதோடு, நாளாந்த மின்வெட்டுகளும் நடைமுறையில் உள்ளன. உற்பத்திக்கான அடிப்படை மூலப்பொருட்கள் இல்லாமை, நாணயத்தின் 80% மதிப்பிழப்பு (2022 மார்ச் முதல்) என்பவற்றோடு வெளிநாட்டு நாணயக் கையிருப்பு பற்றாக்குறை மற்றும் சர்வதேச கடன் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நாட்டின் தோல்வி என்பன ஒன்றிணைந்து இலங்கையின் பொருளாதாரத்தை மிகவும் சுருங்கிய ஒரு நிலைக்கு கொண்டு செல்கிறது.

பொருளாதார வீழ்ச்சியானது உணவுப் பாதுகாப்பு, விவசாயம், வாழ்வாதாரங்கள், மற்றும் சுகாதார சேவைகளுக்கான அணுகல் என்பவற்றை குறிப்பாகப் பாதித்துள்ளது. இறுதி அறுவடைக்கால உணவு உற்பத்தி கடந்த வருடத்தை விடவும் 50-60 சதவீதம் குறைவடைந்ததோடு, தற்போதைய பயிர்ச்செய்கை காலமும் விதைகள், பசளைகள், எரிபொருள் மற்றும் கடன் வழங்கல் குறைவு என்பவற்றின் காரணமாக சிக்கலான நிலைமையிலேயே உள்ளது.

கிட்டத்தட்ட 5 மில்லியன் மக்கள் (சனத்தொகையின் 22 சதவீதமானோர் தற்பொழுது உணவுக்கான ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளனர். 86 சதவீதமான குடும்பங்கள் உட்கொள்ளும் உணவின் அளவை குறைத்தல், உணவு வேளைகளை தவிர்த்தல் போன்ற ஏதேனும் ஒரு சமாளிப்பு பொறிமுறையை பின்பற்றுவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது கிட்டத்தட்ட 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு, அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் மேலும் 163 முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேலும், 2700 க்கு மேற்பட்ட அத்தியாவசிய சத்திரசிகிச்சை மற்றும் 250 க்கு மேற்பட்ட வழமையான ஆய்வுகூட பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மின்வெட்டுகள் அத்துடன் மின்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அதிகளவான மருத்துவமனைகளுக்கு வழமையான மற்றும் அவசரமற்ற சத்திரசிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை பிற்போடுவதைத் தவிர வேறு வழியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

**Media Contacts:**
Sri Lanka:
Dianne Silva, Communications Specialist, Office of the Resident Coordinator | dianne.silva@un.org | +94715306401
Mahina Bongso, Communications Analyst, FAO | mahina.hussain@fao.org | +94 769063511
Bismarck Swangin, Chief of Communication, Advocacy and Partnerships, UNICEF | bswangin@unicef.org | +94 777 236 548
Tanya Jansz | Communications Officer, WFP | tanya.jansz@wfp.org | +94769102462
Dilshani Dias, Communications & Advocacy Officer, UNFPA | didias@unfpa.org | +94 770152424

In Bangkok:
Pierre Peron, Regional Public Information Officer, UN Office for the Coordination of Humanitarian Affairs | peronp@un.org | +66 614-200-390
David Swanson, UN Regional Public Communications Officer, Department of Global Communications | swanson@un.org | +66 6 5982-5682

**Get in touch**: UN Sri Lanka on Twitter | Facebook | Instagram